**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 156** **நாள் : 04.07.2025**

**மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியின் சுகாதாரச் சேவைகளை மேம்படுத்தும் பொருட்டு, மாநகராட்சி மருத்துவமனைகளில் மருத்துவர்களாக பணிபுரியவுள்ள முதுநிலை மருத்துவர்களுக்கான சுகாதாரச் செயல்பாடுகள் குறித்த பயிற்சியினை இன்று தொடங்கி வைத்தார்.**

மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் பெருநகர சென்னை மாநகராட்சியின் சுகாதாரச் சேவைகளை மேம்படுத்தும் பொருட்டு, மாநகராட்சி மருத்துவமனைகளில் மருத்துவர்களாக பணிபுரியவுள்ள பட்டமேற்படிப்பு முடித்த முதுநிலை மருத்துவர்களுக்கான சுகாதாரச் செயல்பாடுகள் குறித்த பயிற்சியினை இன்று (04.07.2025) ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் தொடங்கி வைத்து உரையாற்றினார்.

பெருநகர சென்னை மாநகராட்சி பொதுசுகாதாரத்துறை மற்றும் மருத்துவச் சேவைகள் துறையின் 140 நகர்ப்புர ஆரம்ப சுகாதார மையங்கள், 200 நகர்ப்புர நலவாழ்வு மையங்கள், 16 நகர்ப்புர சமுதாய நல மருத்துவமனைகள், 3 மகப்பேறு மருத்துவமனைகள் மற்றும் ஒரு தொற்றுநோய் மருத்துவமனை ஆகியவற்றின் மூலமாக பொதுமக்களுக்கு மருத்துவ சேவைகள் வழங்கப்பட்டு வருகிறது.

தேசிய நகர்ப்புற சுகாதார இயக்ககத்தின் மூலமாக, பெருநகர சென்னை மாநகராட்சியில் இயங்கும் நகர்ப்புர ஆரம்ப சுகாதார நிலையங்கள், நகர்ப்புர நலவாழ்வு மையங்கள் மற்றும் நகர்ப்புர சமுதாய நல மருத்துவமனைகளில் பொதுமக்களுக்கு கூடுதலான சேவைகள் வழங்க தேவையான மருத்துவர்கள் மற்றும் மருத்துவம் சாரா பணியாளர்களை பணியமர்த்தி செயல்பட்டு வருகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சியின் சுகாதாரச் சேவைகளை மேலும் மேம்படுத்தும் பொருட்டு, மாநகர ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் நகர்ப்புர சமுதாய நல மருத்துவமனைகளில் காலியாக உள்ள மருத்துவர் பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, 155 காலிப்பணியிடங்களை நிரப்புவதற்கு 5 மருத்துவர்கள் பணிமாற்று அடிப்படையிலும், முதுநிலை பயிற்சி முடித்த 150 மருத்துவர்களும் பணியமர்த்த ஆணை பெறப்பட்டது. இதுவரை 113 முதுநிலை மருத்துவர்கள் பணியில் சேர்ந்துள்ளனர்.

இந்த பட்ட மேற்படிப்பு முடித்த முதுநிலை மருத்துவர்கள் 2 ஆண்டு காலம் பெருநகர சென்னை மாநகராட்சியில் பணிபுரிவர். இவர்களுக்கு பெருநகர சென்னை மாநகராட்சியில் பொதுசுகாதாரத்துறை மற்றும் மருத்துவத் துறையில் செயல்பட்டு வரும் பல்வேறு சுகாதாரச் செயல்பாடுகள் குறித்த பயிற்சியானது 04.07.2025 முதல் 05.07.2025 ஆகிய இரண்டு நாட்களுக்கு நடைபெறுகிறது. இதில் பெருநகர சென்னை மாநகராட்சி குறித்தும், மருத்துவமனை மேலாண்மை மற்றும் மருத்துவம் சார்ந்த பல்வேறு பயிற்சிகள் வழங்கப்படுகிறது.

இந்நிகழ்ச்சியில், மதிப்பிற்குரிய துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார், ஆணையாளர் திரு.ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., இணை ஆணையாளர் (சுகாதாரம்) முனைவர் வீ. ப. ஜெயசீலன், இ.ஆ.ப., மாநகர நல அலுவலர் டாக்டர் எம். ஜெகதீசன், மாநகர மருத்துவ அலுவலர் டாக்டர் ரமோனா, மண்டல நல அலுவலர்கள், மண்டல மருத்துவ அலுவலர்கள் மற்றும் மருத்துவர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**